**ஆயுர்வேத வைத்திய சபை – 2017**

-----------------------------------------------------------------------

ஆயுர்வேத வைத்திய சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பகுதியின் 11 ஆம் பிரிவுகளிலிருந்து 21 வரையிலான பிரிவுகள் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று வைத்திய சபையின் தலைவருக்கு 2018 யூன் 22 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

-----------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக்க கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து ஆயுர்வேத மருத்துவ சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 1**

(i) நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம், இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களால் வேண்டப்பட்டாலோ அல்லது அனுமதிக்கப்பட்டாலோ அன்றி வருமானங்களும் செலவினங்களும் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்படமாட்டாதும் எனினும், ரூபா 50,592 தொகையான வைத்திய சான்றிதழ் புத்தகங்களின் அச்சிடல் செலவினமானது அத்தகைய புத்தகங்களின் 1,054 புத்தகங்களின் விற்பனை வருமானமான ரூபா 368,900 இற்கு எதிராக எதிரீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 318,308 தேறிய வருமானம் மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 132 ஆம் பந்தியின் பிரகாரம், முக்கிய கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். எனினும், சபைக்கு கிடைத்த அரச மானியங்களை கணக்கிடுவது தொடர்பான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 69 ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்களை பெறுமானத்தேய்வானது அதனை பயன்படுத்த தொடங்கியதிலிருந்து ஆரம்பிக்கின்றது. எனினும், இதற்கு முரணாக சபையானது சொத்தினை கொள்வனவு செய்த திகதியை கருத்திற்கொள்ளாமல் முழு ஆண்டிற்குமான பெறுமானத்தேய்வு கொள்கையை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணனிகள் மற்றும் முறைமைகளின் திருத்தங்களிற்காகவும் திரைச்சீலைகளை போடுவதற்காக மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய ரூபா 113,570 தொகை கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது மீண்டுவருஞ் செலவினமாக பெறப்பட்ட ரூபா 6,750,000 தொகையான அரச மானியங்களில் ரூபா 6,000,000 தொகை மாத்திரம் வருமானமாக கொண்டுவரப்பட்டிருந்ததுடன் ரூபா 750,000 தொகை ஒதுக்க மற்றும் மூலதனக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச் சட்டத்தின் III ஆவது பகுதியின் II(1)(உ) பிரிவு | பதிவு செய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்கள் மூவர் மற்றும் ஆயுர்வேத கல்வி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மூன்று ஒவ்வொரு விரிவுரையாளர்களிலும் தெரிவு செய்யப்பட்ட விரிவுரையாளரொருவர் சபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அத்தகைய வைத்தியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நிதிப் பிரமாணம் 756 | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 6,168,201 தொகையான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக 2018 மே 30 ஆந் திகதி வரையிலும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் முன்னைய ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு மீதான அறிக்கைகளால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் 2018 மே 10 வரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 இன் பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவு | வைத்திய சபையின் உயர் முகாமைத்துவ மட்டத்திலுள்ள பதவியான பதிவாளர் பதவிக்கு தேவையான ஆட்சேர்ப்பு திட்டமெதுவும் உருவாக்கப்பட்டிருக்காததுடன் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதியும் பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2005 யூலை 05 இன் திகதி 14/13/08(03) ஆம் இலக்க ஆயுர்வேத வைத்திய சபை பத்திரம் | சபையில் பதிவு செய்துள்ள சகல வைத்தியர்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை பதிவினை புதுப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 வருடங்களுக்கு மேலான பதிவானது காலாவதியடைந்த 15,727 வைத்தியர்கள் பதிவினை புதுப்பித்திருக்காததுடன் சபையானது பதிவினை புதிப்பிப்பதற்கதன முறையான முறைமையொன்று இனங்கண்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஆதலால் மீளாய்வாண்டு தொடர்பாக சபைக்கு ஏற்பட்ட வருமான இழப்பு ரூபா 16,530,750 தொகையாகும். |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிசார் விளைவுகள் ரூபா 1,476,904 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,153,359 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,630,265 ஆன பின்னடைவைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ஆயுர்வேத வைத்தியர்களிற்கான பதிவுக் கட்டணம் ரூபா 3,819,131 ஆல் அல்லது 50 சதவீதத்தால் குறைந்தமை மேற்குறித்த பின்னடைவிற்கு பிரதான காரணமாகவிருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது, 2013 இலிருந்து ரூபா 1,575,270 மிகை அதிகரித்து பின்னர் 2014 ஆம் ஆண்டளவில் ரூபா 3,371,292 மிகைக்கும் மீண்டும் இது 2015 இல்ரூபா 712,624 க்கு குறைவடைந்தது. 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,153,359 வரை அதிகரித்த மிகை 2017 ஆம் ஆண்டில் ரூபா 1,476,904 பற்றாக்குறைக்கு குறைவடைந்தது. நிதிசார் விளைவுக்கு ஊழியர் மிகையூதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு மற்றும் நிதிசார் விளைவுக்குரிய வரி போன்றவற்றை சீராக்கிய பின்னர், 2013 ஆம் ஆண்டிலிருந்த ரூபா 5,733,505 பங்களிப்பு 2017 ஆம் ஆண்டளவில் தளம்பல்களுடன் ரூபா 4,674,974 வரை குறைவடைந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்பாடு மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆயுர்வேத வைத்திய சபை மற்றும் பராம்பரிய ஆயுர்வேத வைத்தியர்களை பதிவு செய்தல், பரீட்சைகளை நடாத்துதல், பரீட்சைப் பெறுபேறுகளை விநியோகித்தல் போன்ற செய்முறைக் கடைமைகளை மதிப்பிடுவதற்கான செயலாற்றல் குறிகாட்டிகள் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன் செயலாற்றலானது மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1961 இன் 31 ஆம் இலக்க ஆயுர்வேத அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பகுதியின் 18 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் பிரதான நோக்கங்களை அடைதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மருத்துவர்களை பதிவு செய்தல் 70 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன், பட்டதாரிகள், பழமையான பௌதீகவியாலாளர்கள் மற்றும் 70 சதவீதம், 81 சதவீதம் மற்றும் 91 சதவீதத்தால் குறைவடைந்தது. எனினும், அதற்குரிய காரணங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) 2013 ஆம் ஆண்டின் இறுதி நேரத்திற்கான பதிவிற்கு பின்னர் ஆயுர்வேத தாதிகள் (இரண்டாந்தர உத்தியோகத்தர்கள்) புதிதாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதற்கு மேலதிகமாக, ஆயுர்வேத மருத்துவ நிலையங்கள் மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்டிருக்காததுடன் சபையில் அத்தகைய உத்தியோகத்தர்களை பதிவு செய்தவற்கான முறையான முறைமையொன்று இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், பழமை வாய்ந்த ஆயுர்வேத வைத்தியர்களை பதிவது தொடர்பான எழுத்துப் பரீட்சை மீளாய்வாண்டின் போது இடம்பெற்றிருக்க வேண்டிய போதிலும் பரீட்சையானது 2018 மே 10 இலும் இடம்பெற்றிருக்கவில்லை. அதற்கு மேலாக, சபையானது முன்னைய ஆண்டின் ஒக்தோபர் இல் நடைபெற்ற எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளை 2017 திசெம்பர் 31 இலும் வழங்குவதற்கு தவறியிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போதும் மற்றும் முன்னைய ஆண்டின்போது போலி வைத்தியர்கள் தொடர்பாக முறையே 14 மற்றும் 34 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், அதில் முறையே 11 மற்றும் 08 முறைப்பாடுகள் 2018 மே 16 அளவிலும் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட 03 மற்றும் 26 முறைப்பாடுகள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆயுர்வேத அதிகாரச் சட்டம் மற்றும் ஒழுக்காற்று கட்டளைகளை காலத்தின் தேவைக்கேற்ப வகையில் திருத்தம் செய்யப்படாமையால் அவ்வாறு புலனாய்வு செய்யப்பட்ட விசாரணைகளில் கண்டிப்பு மற்றும் அறிவுறுத்துதல்கள் வழங்கல் மாத்திரம் இடம் பெற்றிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், 12 தந்திரோபாயங்கள் தொடர்பாக பூர்த்தி செய்யப்பட வேண்டிய 26 நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆயுர்வேத வைத்திய சபையின் கட்டிடத்திற்கு மின்சாரத்தை வழங்குகின்ற மின்சாரமானியை இணைப்புச் செய்வதன் மூலம் ஆயுர்வேத திணைக்களத்தின் சாரதிகள் ஓய்வு விடுதிகளிற்கு மின்சாரம் வழங்கப்பட்டிருந்தது. அதனால், ஆயுர்வேத வைத்திய சபையின் மாதாந்த மின்சாரப்பட்டியல் வழமைக்கு மாறான முறையில் ரூபா 32,503 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) சபையின் பதிவாளர் பதவிக்காக 2017 ஆகஸ்ட் 08 இலிருந்து ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்ட ஆயுர்வேத நிபுணருக்கு வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தின் பிரகாரம் அவர் சபையில் முழுநேரமும் சேவையாற்ற வேண்டும். எனினும், சபையானது அவருடைய வருகை மற்றும் வெளிச்செல்லலை உரிய பதிவேட்டில் பதிவு செய்யத்தேவையில்லையென தீர்மானித்திருந்தது. அதனால், அவர் அப்பதவியில் முழுநேர கடமை தொடர்பாக அமர்த்தப்படவில்லையென அவதானிக்கப்பட்டது.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையால் பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத வைத்தியர்களில் அவர்களின் தகவல்களை கண்டுபிடிக்க முடியாதிருந்த 1,619 ஆயுர்வேத வைத்தியர்கள் தொடர்பில் காலதாமதமில்லாமல் சபையினால் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், அதனை பயன்படுத்தி போலி வைத்தியர்கள் வைத்தியம் செய்வதற்கான வாய்ப்பு இருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.3 நிதியங்கள் முகாமைத்துவம்

காசுப்புத்தகத்தின் பிரகாரம், 2017 சனவரி 01 இல் உள்ளவாறான வங்கி நடைமுறைக் கணக்கு மீதி ரூபா 5,406,214 தொகையானதுடன் 2017 திசெம்பர் 31 அளவில் இந்த மீதி ரூபா 4,339,576 ஆகவிருந்தது. மீளாய்வாண்டில் மாதாந்த சராசரி வங்கி மீதி ரூபா 4,992,668 ஆகவிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறை விகிதம் 7.27 ஆகவிருந்தது. அதனால், தொழிற்படு மூலதனத்தை தவிர்த்து வட்டி வருமானத்தை உழைக்கின்ற குறுங்கால முதலீடுகளின் மீதமாகவுள்ள காசினை வைப்பிலிடுவதற்கு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 4.4 செயற்பாட்டு நடவடிக்கைகள்

ஆயுர்வேத வைத்தியர்களின் பதிவினை புதுப்பித்தலின் போது மேற்கூறப்பட்ட சான்றிதழ்களில் 6000 இனை அச்சிடுவதற்கும் 2015 திசெம்பர் 18 இல் புதிய சான்றிதழ்களை விநியோகிப்பதற்கு வைத்திய சபை தீர்மானித்திருந்தது.. எனினும், புதிய சான்றிதல்களை அச்சடிப்பதானது 2018 மே 10 இலும் நடைபெற்றிருக்கவில்லை. அதனால், உரிய சான்றிதழ்கள் 2015 இலிருந்து 2017 வரையான பதிவினை புதுப்பிப்பதற்காக கொடுப்பனவுகளை மேற்கொள்ளப்பட்ட 7,934 வைத்தியர்களுக்கு வழங்கப்பட முடிந்திருக்கவில்லை.

### 4.5 பதவியணி நிர்வாகம்

சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பிரகாரம், இரண்டு முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் அலுவலகர் ஊழியர் சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. நிலைபெறுதகு அபிவிருத்தி

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட 2017 ஆகஸ்ட் 14 இன் என்பி/எஸ்பி/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிலைபெறுதகு அபிவிருத்தி மீதான ஐக்கிய ராஜ்ஜியத்தின் ''2030 நிகழ்ச்சி நிரல்'' என்பவற்றின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களும் வெயலாற்ற வேண்டிய போதிலும், ஆயுர்வேத வைத்திய சபையானது மீளாய்வாண்டுடன் தொர்புடைய அதனுடைய எல்லையின் கீழ் வருகின்ற செயற்பாடுகளை அமுல்படுத்தும் வகையில் கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு மற்றும் 2004 பெப்ரவரி 24 இன் 01/2004 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம், நியதிச்சட்ட சபையினால் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் 41 நாட்கள் தாமதத்துடன் 2018 ஏப்ரல் 11 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 6.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

12 வருமான விடயங்கள் தொடர்பாக பாதிடப்பட்ட மற்றும் உண்மையான வருமானம் என்பவற்றுக்கிடையில் 45 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை பாதகமான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன், 03 செலவின விடயங்கள் தொடர்பில் பாதிடப்பட்ட மற்றும் உண்மையான செலவினத்திற்கிடையே 29 சதவீதம் தொடக்கம் 128 சதவீதம் வரையிலான முரண்கள் அவதானிக்கப்பட்டது. ஆகையால், பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 6.3 ஆண்டறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டிற்கான மருத்துவ சபையின் ஆண்டறிக்கைகள் 2018 மே 23 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 6.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

2006 ஆம் ஆண்டிலிருந்து 2014 திசெம்பர் 31 வரையிலுமான காலப்பகுதிக்காக பெறப்பட்ட ரூபா 9,780 கூட்டுத்தொகையான 27 காசு கட்டளைகள் தேறாமல் சேவைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் 27 காசுக் கட்டளைகளின் மூலப்பிரதிகள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்றிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பில் பின்வரும் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) பராம்பரிய வைத்தியர்களை பதிவு செய்தல், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல், எழுத்து மூல மற்றும் வாய்மொழிப் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுதல் போன்றவற்றிற்கான காலத்தை தீர்மானிப்பதற்கும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கத் தவறியமை. |
| | (ii) ஆயுர்வேத அதிகாரசபை மற்றும் ஒழுக்காற்று கட்டணங்களை திருத்தஞ் செய்வதற்கும் விரைவான விசாரணை மேற்கொள்வதற்கும் முறைமையொன்றை ஸ்தாபிக்க தவறியமை. |